உ

மாரனைப் பயின்ற

மாறனைப் பணிவாம்.

சேலம் ஜில்லாவில்

கள்ளுக் கடை மூடிய சிந்து.



இஃது

பல்லக்காபாளையம் உபாத்தியாயர்

R. கந்தசாமி பண்டாரம்

கேட்டுக் கொண்டபடி

நாமக்கல் தாலுகா செவிட்டுரங்கன்பட்டியிலிருக்கும்

A. சுந்திரம் பிள்ளையவர்களால்

இயற்றியதை

மகா-ள-ள-ஸ்ரீ இருகாலூர் மிட்டா ஜமீன்தார்

M. செங்கோட்டுவேல கவுண்டர்

பொருளுதவியது.

திருச்செங்கோடு ஷண்முகா பிரிண்டிங் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] [அணா 0 1 0

1937.

ஈசுவர ஷூ அர்ப்பிதமஸ்து.

உ

விளங்குமான் றந்த விளங்குமான் றணே.

சேலம் ஜில்லாவில்
கள்ளுக் கடை மூடிய சிந்து.

இருவர்கள் சம்பாஷணே.

வேலப்பன்:— ஆர்ரா அங்கே போறது.

காளியப்பன்:— ஏண்டா வேலப்பா

வே. ஆர்ரா காளிப்பனு.

கா. ஆமாண்டோய்.

வே. இர்ரா நானும் வார்ரே.

கா. ஏக்கேண்டா சட்டுனுவாடா.

வே. சட்டுனுவர்ராமே, என்னடா பண்ணரே முன்னேயாட்டமா கள்ளு தண்ணியா இக்குது, நெருங்கக் குடிச்சுட்டு போதையாத்தாள் ளாடி தள்ளாடி மெல்லவர் ரத்துக்கு, அந்தம்மாதான் கரையேறிப் பூட்டாங்கோ, இனி அதெப்பேசறதிலே என்னடாக்குது

காளி. அதிதொலேஞ்சு போனது நல்லது என்றயா, கெட்டது என்ற யேடா.

வே. என்னமோ அப்பா நானல்லாஞ் சின்னவயசிலேந்து இந்த நாப்பது வருஷகாலமாபாழுங் கள்ளெக்குடிச்சுப்பழகிப் பூட்டு இப்பதலேலே கல்லுப்போட்டாபிளெ எடுபட்டு போச்சுன்னு கேட்டதிலிந்து பாரு! எம் மூத்த பொண்டாட்டி ரண்டு கொழந்தெ, எங்கப்பெ, இவங்கல்லாம் மூணு வருஷத்திலே, வந்த வேதிலே ஒருநாளயிலெ செத்தாங்க, அப்பக்கூடொ இவ்வளவு வெசனமில்லே இப்பொ இப்பி டின்னு கேட்டொடனே பாரு, கைகாலெல்லாம் வெல வெலத்துப் போச்சு எம் புத்தி எனக்கில்லெ, மனசு தடுமார்றது.

காளி. என்னடா தடுமாறுது, கள்ளுப்போயி ரெண்டு நாளாச்சு, இன்னிக் கிங்குடிச்சவனுட்டமா ஒளர்றே.

வே. அடே ஏண்டா போடா பவானிலே இருக்குதாம், அங்கயல்லா கடைமூடில்வியாமெ, அங்கே போனு நல்லா குடிக்கலாமா போலா மின்னு தான் பார்த்தேஎ, அதுக்குள்ளெ நம்ம வீராண்டி அடெ அங்கெ அந்தூராருதாங் குடிக்கலாமா, மத்த இந்த சேலஞ் சில்லாக் காரரு இன்னு போலீசாருக்குத் தெரிஞ்சா பிடிச்சு அடைச் சுடுவாங்களா, கார் காரெங்கூட வண்டிலேத்த மாட்டானு, அப்படி எத்திக்கிட்டு வந்தாலுங் அவனேயுங் கூட காரோட்ட வெய்க்க மாட் டாங்களாமே, அப்படியெல்லாங், ஆரோ காந்தி ஐயாவாங் அவொங்க எங்கயோ காங்கரஷாங், அதுலெ பேசி திட்டம் பண்ணிட்டாங்களா அப்படிபேப்பரு லேவந்துக்கு தின்னு எங்கபயங் கூட சொன் னுண்டா, நேத்து

APR

கா. எண்டா அப்படி யெல்லா தெரிஞ்சுக்கிட்டா இப்பக்கூட எங்கயொ திருட்டுக் கள்ளுக் குடிச்சுட்டு இப்பிடியெல்லாம் ஔர்றே இது வெளியே தெரிஞ்சா நீயும்போனெ, நானும் போன, எதடாப்ப உன்னோடம் பேசக்கூடப் படாது, நம்ம ஊர்லே கணக்கப்பிள்ளை மணியாரெ, முனிசீப்பு, ஆறுகண்டலும் பிடிச்சு போலீசுக்கு அனுப்பிடுவாங்களாமே

வே. ஆமாமாங், முனிசீப்பு, கணக்கப்பிள்ளை யென்ன, நம்ம தோட்டு ஆருங் கண்டு எழுதிட்டாலுங்கூட போலீசுக்காரே வந்து பிடுச்சுகிட்டுப் போயிடுவானுங், அதுகூடப் பேப்பருலே இக்குதாங்

காளி. எண்டா, அப்பிடியெல்லாங் கேட்டிருந்துமா இப்ப இப்படித்தள்ளாடரே.

வே. இல்லடா முன்னெ வாங்கின மப்பரா உரண்டை ஒன்னிந்திது அதை வாயிலெ போட்டெ அந்தெ தழவு பேரைக் கெடுக்குமாட்டிக்குது.

கா. ஆனு பேசாதேவா இதைப்பத்தி நாமக்கல்லுக்கடுத்த பெரியபட்டி வாத்தியாருமவனுஞ் சுந்தரம்பிள்ளென்னு ஒத்தருகூட கள்ளுக்கடை மூடினதெப்பத்தி ஒரு பாட்டுபாடி இக்குதுனு எம் பயென் நேத்துச் சந்தைக்குப்போனவன் ஒரு பொய்தவம் ஆறு காசு குடுத்து வாங்கியாந்தானும், அதெ நா வாங்கி மடியிலே வெச்செ அதை எடுத்துச் சொல்றெ, கேட்டுக் கிட்டு வாடா.

வே. ஆன சொல்ரு கேட்டுப் பார்ப்போம்

விருத்தம்

ஆதிமுதற் சென்னைவளர் சூளை முனி சாமி யென் போழகிதாகன
மேதினியோர் பலருங் கேட்டானந்த கொளக்கள்ளின் மேன்மை
[தாண்மை
சாதனையாம்படிச்சிந்தாய்ப்பாடி வைத்தான் யாமுமொரு தமிட்
[சிந்தாலே
ஓதிடவேமுக்கணனுருதவு கணபதி பதத்தையுஙங் கொள்வோமே.

கா. அடெ வேலப்பா ஆருங் ஒரு பாட்டுப் பாடறதுன்னு முன்னே புள்ளாரு மேலெ காப்புப்பாடிட்டுதாங் அப்பறெம் பாடறதாங் இந்தய் யாவுங் அப்பிடியெபாடிக்கிருங்கொ இன்னஞ் சொல்றெ நல்லா குனுப்பாக்கேட்டுவாடா

வே. ஆனுச்சொல்லு.

காளி. பட்டணத்தய்யா முன்னெ பாட்டிலெ இரண்டடி இந்த பொய்த்துவத்துலெ போட்டிக்குருங்கோ, அதெ முன்னெ சொல்றெங்கேளு.

சிந்து

இ. நாதநாமகிரியை தா. ஆதி.

பல்லவி.

வந்துதே கள்ளு ஈசுரன்போலே
வருகுதே கள்ளு

அனுபல்லவி

வந்துதே குடங்கள்ளு வாகானக்கருவாடு
நொந்துகிடந்த பேரை வெட்டித்தள்ளிக்கொண்டுவந்

காளி. இது முன்னத்த பாட்டு, இப்பத்த பாட்டுங் இந்த எசைதான் சொல்லிவர்றேங்கேளு

பல்லவி.

1. போச்சுதே கள்ளு குட்டிக்கரணம்போட்டுப்
போகுதே கள்ளு.

அனுபல்லவி.

போச்சுது குடம் கள்ளுப் புரட்டாசி பதினைந்தில்
மூச்சுவிடாமறிக்கு முக்காடிக் கும்பிட்டு (போச்சு)

சரணங்கள்.

கள்ளுக் கடையும் போச்சுக் காரியத்தனம் போச்சு
சுள்ளித் தோசையும் போச்சு சுண்டல் வடையும் போச்சு
உள்ளுக்குடுவோர் பேச்சு உறங்கிக் கிடக்கலாச்சு
ஊரிற் சண்டைக் கூச்சலும் ஓய்ந்து மடிந்துபோச்சு
ஓகோகோ போச்சே வென்று
ஒப்பாரியாச்சே.

2. ஈஸ்வரா வருஷத்தில் இங்கிலீஷ் கவர்ன்மெண்டு
இந்தியர் வசமாச்சு என்பதற்கொரு குண்டு
வீசினர் காங்கரஸு விஷயதானங் கொண்டு
வீணன கள்ளினை வெட்டிப் புதைக்கக் கண்டு
வெகுபேருக்குத் துக்கம் வெளியிற் சொல்லவென்றால்
வீணன வெட்கம்.

3. எத்தனை குடும்பங்கள் இதனாலே கெட்டது
எத்தனை தெண்டங்கள் இதனாலே பட்டது
கர்த்தனை நினைந்துக் கலங்கிக் கும்பிட்டது
கன்னியர் சனியன்கள் இன்னோடெ விட்டது
கதிபெறுவோமே கள்ளை விட்டுவிடு
தலையடைவோமே.

4. பாழுங்கள்ளினாலே பட்டபாடு சொல்ல
பாரதமாகுமப் பாடொழிந்தது நல்ல
வாழ்வு வந்தது காந்தி மகராஜனால் மெல்ல
வந்தது சுதந்திரம் வடக்கத்தியான் செல்ல
வழியிது வச்சே கள்ளரக்கனை வெட்டிக்
குழியிட்டலாச்சே.

5. கள்ளைக் குடித்துவிட்டு கால் தலை தெரியாமல்
கண்டவிடத்திலெல்லாம் முண்டமா யறியாமல்
சொல்லும் பேர்களிடம் மல்லுக்குச் சலியாமல்
துணையொருவன் சேர்ந்தால் நினைவு புரியாமல்

திருட்டோடு வழிப்பறியல் நடந்ததித்
திக்கில்வழிக்காட்டாமல் மக்கிவிடவே
பொருப்புளப் போலீஸு அதிகார
பொம்மைகளால் நின்றதோர் நன்மையென்னலாம்

இதைப்போலின்னுமனேகம் சொல்லறிய
ஏற்பாடு செய்து நம்மைக் காப்பாற்றிவந்தார்
இதிலொரு வெள்ளைக்கொக்கு கள்ளுத்தண்ணி
என்பதையெப்படியோ கண்டுபிடித்து

மயக்கமுடைய வஸ்து இதுவால்
வருமானஞ்செயவென்று குறுமானமாய்
நயத்துடன் பேசித்நமது உத்தியோக
நாட்டமறியாதபடிக் காட்டுஞ்பயல்கள்

பின்னுல்வரும்பயனை யறியாது
பிட்டிஷன்கள்கிளப்பினுர்கள் சட்டையணிய
மன்னுதிமன்னரைப்போல் ஏலமிடும்
வாசலுக்குப்போகவண்ணுன் வாசலைக்காத்து

துணிமணி வாங்கிக்கொண்டும் செட்டிக்கடைத்
தூதுவராலுள் நுழைந்து காதலுடனே
பணம்கடன்வாங்கிக்கொண்டும் குதிரைவண்டி
பஸ்ஸுகளு மோட்டாரும் பயணம்வைத்து

வருமிவர் பாங்கெல்லாம் சொல்லவென்றுல்
வருஷக்கடைசியினில் பவிசென்னமோ
குறுகிவிட்டது டம்பம் ஐயாவின்
கூத்திவீடும் நாத்திவீடும் சாத்தியாச்சுது.

என்றிந்தவொப்பாரி கோட்டில்
ஏலமென்று தண்டோரா மூலமறிவோம்.
இன்றைக்குமது நடப்பு பார்த்திருந்தும்
ஏமாந்து ஈ போல தாழுந்தவறி

போவதுமல்லாம விருப்பவரின்
போக்கையுந்தொலைத்தவர் செல்வாக்கையும்
விட்டு

சாவதற்கு வழிதேடிப் போனவர்கள்
சங்கையைக்கணக்கெடுக்க விங்குதவுமோ

இதுபோல் குடியர்களும் கைப்பொருளை
இறைத்துத் தினந்தினமும் குடித்துவிட்டு
மதிகெட்டுதிரிவதல்லால் கோரட்டு
வாரண்டில் சிக்கியுள்ள ஊரையும்விட்டு

பண்டாரவேடமிட்டு தெந்தினத்தாம்
பாட்டுப்பாடி சோறுவாங்கிக்கூட்டிப்பிரித்து
உண்டிடும் வேளையிலே போலீசார்
உளவறிந்துங்குவந்து களவாடி

பையலே வாருமென்று விலங்கிட்டு
பாட்டையிலேகூட்டிப்போகும் நாட்டமறிந்தும்

ஐயையோயீதெதனாலே யாச்சுதென்று ஆலசித்துப்பார
வேலையுமிட்டு

சாடையாயொரு புட்டி கள்ளை வாங்கி
சாக்கணவோர் துண்டுடனே நாக்கிலிட்டதும்
போடையா யின்னுமிரண்டு புட்டியென்று
பொந்தில் விழு தண்ணியென குந்தி குடித்து

தலைகால் தெரியாமல் தடுமாறிச்
சந்திலும்பொந்திலும் வீழ்ந்து மண்டையுடைந்து
அலைந்து திரிந்து மறுநாள் காலையிலே
ஆஸ்பத்திரி சென்றவன் பிளாஸ்திரியிட்டு

வெகுபேர் திரிவதையும் பார்த்துப்பார்த்து
மேன்மையெல்லாம் குன்றிவிடும் பான்மையறிந்து
தகுதியிலாமல் போமென்று மகாத்மா
சாந்தகுணமேந்திடு நங்காந்தியவரும்

இன்னும்பல் பிரமுகரும் சேர்ந்துநமை
ஈடேற்றவே படாத பாடுகள்பட்டு
சன்னஞ்சன்னமாய் நமது கவர்ன்மெண்டில்
சன்னது வாங்கியே கள்ளைக் கொன்றுவிடவே

சேலஞ்ஜில்லாவில் மட்டும் கள்ளுக்கடை
சேலுக்குவராமல் தடுத் தாளவே வந்தார்
பாலும் பழமுமுண்ணுங்கள் முன் செய்த
பாக்கியமிதென்று சொல்லி நோக்கியெண்ணுங்கள்.

சங்கரா சங்கரா சம்போ - சிவ

அகிலத்திலிந்திய தேசம் போல
வாணிப்பொன் றேயத்தைக் காணப் பிரயாசம்
வெகுபத்தி வெகுபத்தியேசம் மேளம்
வேணதுண்டி லக்குமி யன்ருடம் வாசம்

எந்தெந்த தேசமு மிதையே பார்த்
தேமார்ந்து ஏமாந்து வாயூறி நசையே
சிந்திக்கிடந்திடுமதையே வாரித்
தின்றிளைப்பாறுவரொன்றிலை சதையே.

தங்கமும் வெள்ளியும் பூத்துக் காய்க்கும்
தந்திர செடி வகையெங்கிலும்போத்து
செங்குறுத்து கள்விட்டண்ணுத்தும் செடி
செழிப்பாக வளருவதையவர் பார்த்து

வயறுளைந்தடிக்கடி வருவார் சண்டை
மறியலுக்காகத் தகவலுந்தருவார்
புயலெனு மிறைவரிப்பெருவா ருதியெனும்
புண்ணிய நாட்டினை மன்னியே வருவார்,

கன்னியும் பொன்னிபாய் நாடு நல்ல
கங்கையும் துங்கபத்திரையு முன்னேடும்
சென்னெலும் வாழைதன்னேடு நல்ல
செங்கரும்பும் விளையுன்னத நாடு.

சைவம் தழைத்திட்ட நாடு நல்ல
சங்கரா சாரியும் வாழ்ந்திட்ட நாடு
செய்வளம் பூண்டிட்ட நாடு இதின்
செழிப்பும் வளப்பமும் சொல்லவோ கூடும்.

அண்டின பேர்களையெல்லாம் தன்போ
லாக்கவும் சேக்கவும் யோக்யமில்லாமல்
மண்டிய பழம்பொருளெல்லாம் யார்க்கும்
வாரிக்கொடுத்தாலு மழியாது நல்லாம்

சாஸ்திரம் பிறந்ததின்னாடு நல்ல
சகுண லட்சணக் கவிதனைப்பாடு
கோத்திர மறிந்த தின்னாடு நல்ல
குடிபடை க்ஷேமங்கொண்டதின்னாடு.

ஏதேது கேட்கிலும் தருமே ஒரு
எக்கர் லட்சம் ரூபாய் விலை பொருமே
சாதாரண பலன் வருமே எதும்
தன்னிச்சையாகவே விளை நலந்தருமே.

அப்படிக்கொத்ததோர் தேயம் தன்னில்
அரச மரதொட்டென வாங்கிலேயம்
சப்பை நாட்டோரரோ ருபாயம் ரா
[illegible] த்தத்தலைப்பட்ட நேயம்

கண்ணில் கண்டசெல்லாம் பேரம் அவர்
கச்சேரி வாசலு மெச்சிலும் போம்
மண்ணில் கண்டதெல்லாம் வாராம் இன்றே
மற்ற தொன்னுடிந்த மனிதோபசாரம்

கைத்தொழிலெல்லாமே தங்கள் கையில்
கட்டினர் மற்றோரை வைத்தார்கள் பொங்கல்
பைத்தொழிலென்ன வேதங்கள் எல்லாம்
பையிட்டுக் கட்டினிந்தியர் செங்கல்

ஆவதறியாமற் பட்டம் பி. எ.
ஆனர்ஸ் டாடர் சிஆ மதிற் பதட்டம்
சேவைகளொரு புறந்தட்ட அவர்
செல்வாக்கென்ன வென்பதை பார்க்க கஷ்டம்

பட்டத்திற்காகவோ படுத்தார் தங்கள்
பாக்கியமென்றொரு வாக்கை விடுத்தார்
கட்டுச் சேவல் சண்டை தொடுத்தார் கைக்
காசெல்லாம் பலபேருக்கும் வாரியே கொடுத்தார்

ஐயையோ பிச்சையிடாமல் பசிக்
கன்னமிடா பிரபுக்கள் தொடாமல்
பையில் கட்டிக் கைவிடாமல் வைத்த
பணமெல்லாம் போச்சுதோர் கண்ணிற் படாமல்

முன்னவர் யாவருங்கூடி அர
சியல் நடத்த வந்தபோதினில் சாடி

சொன்னவுடனே மேல்மாடி ஏறித்
தூங்கினர் வாங்கினர் பெருமூச்சுவோடி (ச)

கள்ளுக்கடை யொரு பேரம் அபின்
கஞ்சாவும் சாராய வகையொரு பேரம்
சுள்ளிக் கருவாடும் பேரம் சந்தைச்
சுங்கவரிகளு மெங்கிலும் பேரம்

செய்யலா மென்றொரு சட்டம் சபை
சென்னை மகாணத்தில் வந்திட்ட திட்டம்
பையைப் பையைப் பார்க்கில் கஷ்டம் வந்து
பாழ்படுத்திந்தியா பணமெல்லாம் நட்டம்

ஆகுதென்றறியாமற் குடியர் வீணே
அன்றாடக் கூலியையும் கொண்டு தடியர்
வேகும் வயிறுடை மிடியர் என்று
விசாரணை செய்யாமல் வீசியே கொடியர்

பட்டை சாராயமுங்கள்ளு சுள்ளி
பானவகையுண்டு தடுமாறிப் பல்லு
கொட்டிப் போம்படி தள்ளும் போதைக்
குறிமாறியவுடன் போதனை சொல்லும்

பெண்டுபிள்ளைகள் தாய் தந்தை யோடு
பின்னவர் முன்னவரெல்லாமோர் மந்தை
உண்டுறங்கலாமிந்த சந்தைச் செல
வுக்கிருந்ததை யெலாஞ் சுத்தினோம் விந்தை

என்றுமே பஞ்சாங்கம்பேசி அங்கே
எரிகிற வயிறோடு பெண்சாதியேசி
ஒன்றுஞ் சொல்லாமலே கூசி இனி
ஓகோகோவிது பிழைப்பல்லவே சீச்சீ

இனியிதை யொழித்திட வேண்டும் என்று
உள்ளே நினைப்பது முண்டெருந் தூண்டும்
சனியன்று மாத்திரம் மீண்டும் அந்தத்
தண்ணிக் கடைக்கே தான், தன் கால்கள் தாண்டும்

சத்திய பத்தியமில்லை இந்தத்
தண்ணியை யூத்துவோர்க்குச் சாமியுமில்லை
புத்தியும் நித்தியமில்லை யென்று
பூராவும் சொன்னாரே சுந்தரம் பிள்ளை

இது முதற் பாகமிரண்டாம் பாகம்
என்று பின்னாலொரு புத்தகமுண்டாம்
அதுதனை வாங்கிப்பின் கொண்டால் ரண்டும்
அறிவுடையோர்க் கனுசரணையு முண்டாம்

மண் வாழி மனை வாழி தோழி வாழி
மக்கள் சம்பத்து மகிழ்ச்சியாய் வாழி
பொன் வாழி பொருள் வாழி மேழி வளம்
பொலியப் புதுப்புனல் நீடூழி வாழி